

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் ( 20.12.2023) சென்னை, எழிலகத்தில் உள்ள வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் பெய்த அதி கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், குறிப்பாக கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும், முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் தங்குதடையின்றி வழங்கப்படுவது குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க. பணீந்திர ரெட்டி, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, பேரிடர் மேலாண்மை இயக்குநர் எஸ்.ஏ. இராமன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## திருப்பத்தூர் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில்

# ரூ.56 கோடியில் புதிய கட்டடங்கள் !

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

திருப்பத்தூர், டிச. 22-

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி ஒன்றியம் ஆத்தூர்குப்பம் ஊராட்சி ஜங்கலாபுரம் கிராமத்தில் துணை சுகாதார நிலைய புதிய கட்டடத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று திறந்து வைத்தும், மீதமுள்ள ரூ.4.20 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 13 புதிய துணை சுகாதார நிலையங்களை காணொலி காட்சியில் திறந்து வைத்தும் சுகா தாரத்துறையினர் சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கரபாண்டியன், தலைமை வகித்தார்கள். மேலும் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ. வில்வநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பல்வேறு இடங்களில் புதிதாக கட்டப்ப ட்டுள்ள மருத்துவ துறை கட்டிடங்களை திறந்த வைக்கும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக 14 துணை சுகாதார நிலைய கட்டிடங்கள் திறந்துவைக்கப்ப ட்டிருக்கின்றது. நேற்று மாலை கிருஷ்ணகிரி மாவ ட்டத்தில் நான்கு புதிய கட்டிடங்களை திறந்து வைத்து, இராயக்கோட்டை என்ற பகுதியில் ; ரூபாய் 1 கோடியே 63 லட்சம் மதிப்பில் ஒரு கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டிற்கின்றோம். நேற்று முற்பகலில் தருமபுரி மாவட்டத்தில் நான்கு புதிய கட்டிடங்கள் திறந்து வைத்து, நான்கு கட்டிடங்களுக்கான அடிக்கல் நாட்டப் பட்டிருக்கிறது.

நேற்றைய முந்தைய நாள் சேலம் மாவட்டத்தில் 11 புதிய கட்டிடங்களை திறந்து வைத்து சேலம் மாவட்ட அரசு மருத்துவமனையில் புற்றுநோயை துல்லியமாக கண்டறிகின்ற 12 கோடி மதிப்பிலான ஸ்கேன் கருவியை இயக்க வைத்திருக்கின்றோம்.

மேலும் அரசு கல்லூரி மருத்துவமனையில் இருதய நோய் காண சிறப்பு மருத்துவ பிரிவை 6 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மகளிர்க்கு மகப்பேறுவதற்காக கேமரா வசதியுடன் கூடிய லேட்டராஸ்கோபிக் ரூபாய் 39 லட்சம் செலவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஆக சேலம் அரசு மருத்துவமனை வளாகத்தில் மட்டும் ரூபாய் 18.50 கொடி செலவில் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் தொடங்கி வைக்கப்பட்டது. இப்படி கடந்த இரண்டு நாட்களில் சேலம் கிருஷ்ணகிரி தர்மபுரி மாவட்டத்தில் தொடர்ந்து திருப்பத்தூர் மாவட்டத்திலும் ஏறத்தாழ 40 புதிய கட்டிடங்களை திறந்து வைக்கின்ற வாய்ப்பை முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கின்றார்.

எங்கே எல்லாம் கட்டிடங்கள் தேவைப்படுகிறதோ முன்னுரிமை அளிக்கப்பட்டு கட்டித் தரப்பட்டு வருகிறது. அந்த வகையில் திருப்பத்தூர் மாவட்டத்தில் இன்றைக்கு 14 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. ஆத்தூர்குப்பம் என்று சொல்லப்படுகின்ற இந்த இடத்தில் 30 இலட்சம் ரூபாய் செலவில் புதிய துணை சுகாதார நிலைய கட்டிடமும், குடி யானகுப்பம், மண்டலவாடி, லட்சுமி நகர், பெரியபேட்டை, லக்கியநாயக்கன்பட்டி, அகரம், குறும்ப கேரி, பாச்சல், பள்ளிப்பட்டு, ராவுத்தம்பட்டி, வடபுதுப்பட்டு, காமராஜபுரம், பெரியபேட்டை ஆக 14 இடங்களில் ரூபாய் 4 கோடியே 20 லட்சம் மதிப்பீட்டில் 14 புதிய மருத்துவ கட்டிடங்கள் தற்போது பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

மேலும் இன்றைய தினம் திருப்பத்தூர் மாவட்ட அரசு மருத்துவமனையில் ரூபாய் 8.25 கோடி மதிப்பிலான புதிய எம்ஆர்ஐ ஸ்கேன் கருவினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்த வைக்கப்பட்டிருக்கிறது. இந்த கருவியை பயன்படுத்திக் கொள்ள வேலூர் மாவட்ட தனியார் மருத்துவமனைக்கு செல்ல வேண்டி இருக்கின்றது. மேலும் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் தரை மற்றும் ஆறு தளங்களுடன் கூடிய ஒரு புதிய மருத்துவமனை கட்டிடம் ரூபாய் 23.64 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண் டிருக்கின்றது. அதேபோல் திருப்பத்தூர் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் ரூபாய் 56 கோடி செலவில் புதிய கட்டிடங்கள் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

மேலும் திருப்பத்தூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூபாய் ஒரு கோடியே 40 லட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப தலைமையிட மையம் என்கிற புதிய அமைப்பு உருவாக்கப்பட்டு கொண்டிருக்கின்றது. அதே மருத்துவமனையில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் பொது சுகாதார ஆய்வக கட்டிடம் அமைக்கும் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் ஆம்பூர் அரசு மருத்துவமனையில் தரைதளத்துடன் கூடிய ஆறு தளங்கள் கொண்ட மருத்துவமனை கட்டிடம் கட்டும் பணியும் ரூ.24 கோடியே 31 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இது மட்டுமல்லாமல் புதுப்பேட்டை, மாதனூர், கதிரம்பட்டி, வாணியம்பாடி, அத்தனாவூர் போன்ற பல்வேறு இடங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான கட்டிடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதுவோடு மட்டுமல்லாமல் சிக்கனாகுப்பம், ஜெயபுரம், காமராஜபுரம், கூடப்பட்டு, பல்லவல்லி, புதூர் நாடு, சௌலூர், தாமலேரி முத்தூர், உதயேந்திரம், வெலகல்நத்தம், வெங்கிலி, பசிராபாத், பெரியபேட்டை, கத்தாரி ஆலங்குப்பம், மூக்கனூர், நிலாஊர், இமாம் தெரு, திருப்பத்தூர், காமராஜ நகர், நாராயணகுலம் சிவசக்தி நகர், வக்கனம்பட்டி, ஆகிய 34 இடங்களில் ரூபாய் 119 கோடியே 26 லட்சம் மதிப்பீட்டில் 34 புதிய கட்டிடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மிகப்பெரிய அளவில் மருத்துவத்துறையில் புரட்சி என்று கூறுகின்ற அளவிற்கு கட்டிடங்கள் ரூபாய் 13 கோடி செலவிலான கட்டிடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

திருப்பத்தூர் மாவட்டம் மருத்துவத்துறையில் தன்னிறைவு பெற்ற மாவட்டமாக மிக விரைவில் மாறுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது. நாட்றம்பள்ளி மருத்துவமனையில் டிஜிட்டல் எக்ஸ்ரே, சிடி ஸ்கேன் போன்ற வசதிகளை வழங்கிட வேண்டும் என அறிவுறுத்தி இருக்கிறோம். மிக விரைவில் அது வழங்கப்பட இருக்கிறது. மேலும் இரண்டு, மூன்று வாரத்திற்குள் 1021 மருத்துவர்களுக்கான புதிய இடங்கள் நிரப்பப்பட உள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அ வர்களின் திருகரங்க ளால் அவர்களுக்கு ஆணை வழங்கப்பட இருக்கிறது. இதன் மூலமாக எங்கே எல்லாம் மருத்துவ காலி பணியிடங்கள் இருக்கின்றதோ அவை எல்லாம் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் இன்று காலை 5 மணி அளவில் கிருஷ்ணகிரி மலை உச்சியில் இருக்கின்ற மலை கிராமத்தில் பழங்குடியினர் வசிக்கின்ற ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று அவர்களுடைய குறைகளை கேட்டு அறிந்து மருத்துவ கட்டமைப்புகள் குறித்து ஆய்வு அறிந்து அவர்களுக்கு விளக்கும்வ கையில் மக்களைத் தேடி மருத்துவம் என்ற திட்டத்தின் பயன்பாடுகள் குறித்து அவர்களுக்கு விளக்கி அங்கே ஒரு முகாமும் அமைத்து பயனாளிகளுக்கான மருந்து பெட்டகங்களையும் மகப்பேறு தாய்மார் களுக்கான ஊட்டச்சத்து பெட்டகங்களையும், பார்வை குறைபாடு உள்ள முதியோர்களுக்கு மூக்கு கண்ணாடிகளையும் வழங்கியிருக்கின்றேன்.

இது போன்ற இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றது, இதுவரையில் நான் 250 கிராமங்க ளுக்கு சென்று இருக்கின்றேன். என்னுடைய இலக்கு இன்னும் இரண்டு ஆண்டுகளில் 2000 கிராமங்களில் இருக்கின்ற பழங்குடியின மக்களையும் நேரடியாக சந்தித்து அவர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளை செய்திட வேண்டும் என்பதுதான்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இ.வளர்மதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செல்வராசு, மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் என்.கே.ஆர். சூரியகுமார், துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு.செந்தில், வட்டார மருத்துவ அலுவலர் மரு. செல்லமுத்து, உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு மருத்துவர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி ஒன்றியம், ஆத்தூர் குப்பம் ஊராட்சி, ஜங்கலாபுரம் துணை சுகாதார நிலையத்தில் நடைபெற்ற விழாவில் ரூ 4.20 கோடி மதிப்பீட்டில் 14 புதிய துணை சுகாதார நிலைய கட்டிடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் டி.பாஸ்கர் பாண்டியன் தலைமையில், திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி முன்னிலையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை நிகழ்த்தினார்.

## திருப்பூர் மாவட்டத்தில்

# "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் நடைபெறும் முகாம்கள்!

### அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் நேரில் பார்வையிட்டனர்!

திருப்பூர், டிச.22-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தினை துவக்கி வைத்ததை தொடர்ந்து 18.12.2023 திங்கட்கிழமை அன்று திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர் ஆகியோர் முன்னிலையில் திருப்பூர் மாவட்டம், அவிநாசி பேரூராட்சி, குலாலர் திருமண மண்டபம் மற்றும் திருப்பூர் மாநகராட்சி, அங்கேரிபாளையம், ஜெகா கார்டன் பகுதி ஆகிய இடங்களில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் முகாம்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் நேரில் பார்வையிட்டு, பொதுமக்கள் கணினி மூலம் பதிவு செய்த கோரிக்கை மனுக்களுக்கான ஒப்புகைசீட்டுக்களை வழங்கினர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானாலும் மக்களுக்குத் தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தினை துவக்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, திருப்பூர் மாவட்டம் அவிநாசி பேரூராட்சி, குலாலர் திருமண மண்டபம் மற்றும் திருப்பூர் மாநகராட்சி, அங்கேரிபாளையம், ஜெகா கார்டன் பகுதி ஆகிய இடங்களில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் முகாம்களை பார்வையிடப்பட்டது. திருப்பூர் மாவட்டத்தில் இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு முதற்கட்டமாக அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் (மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி) வார்டு வாரியாக கீழ்க்கண்ட துறைகள் மூலமாக பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற இன்று முதல் 05.01.2024 வரை 71 இடங்களில் முகாம்கள் நடைபெற உள்ளது. இந்த முகாம்களில் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு 30 நாட்களுக்குள் தீர்வு காண்பபடும். இன்றைய தினம் 06 முகாம்கள் நடைபெறுகிறது. இம்முகாம்கள் மூலம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராச்சித் துறை, தமிழ்நாடு மின்சார வாரியம். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை, கூட்டுறவுத் துறை, காவல் துறை, மாவட்ட தொழில் மையம் ஆகிய துறைகளில் சார்பில் இம்முகாமின் மூலம் பொதுமக்கள் வழங்கும் கோரிக்கை மனுக்களுக்கு தீர்வு காண்பபடும். இம்முகாமானது இன்று திருப்பூர் மாநகராட்சி மண்டலம்1ல், வார்டு எண்1, வார்டு எண்9, வார்டு எண் 10 ஆகிய வார்டுகளுக்கு அங்கேரிபாளையம், ஜெகா கார்டன் பகுதியிலும், மாநகராட்சி மண்டலம் 4ல், வார்டு எண்36, வார்டு எண்42, வார்டு எண் 43 ஆகிய வார்டுகளுக்கு தெற்கு ரோட்டரி மண்டபத்திலும், வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்5,6,7,8,9,10,21, ஆகிய வார்டுகளுக்கு மூலனூர் ரோடு வெள்ளகோவில், முத்துக்குமார் திருமண மண்டபத்திலும், உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 26, 27, 28, 29, 30,31, 32, 33 ஆகிய வார்டுகளுக்கு ருத்திரப்பா நகர் உடுமலைப்பேட்டை வட்டம், ஜி.டி.வி திருமண மண்டபத்திலும், அவிநாசி பேரூராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளுக்கும் அவிநாசி வட்டம் மேற்கு ரத வீதி குலாலர் திருமண மண்டபத்திலும் மற்றும் கணக்கம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளுக்கும் திருப்பூர் வடக்கு வட்டம், கணக்கம்பாளையம் கிருஷ்ணா மஹாலிலும் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் முகாம்கள் நடைபெற்று வருகிறது என அமைச்சர் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து திருப்பூர் மாவட்டம், அவிநாசி பேரூராட்சி, குலாலர் திருமண மண்டபம் மற்றும் திருப்பூர் மாநகராட்சி, அங்கேரிபாளையம், ஜெகா கார்டன் பகுதி ஆகிய இடங்களில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் முகாமினை பார்வையிட்டு, பொதுமக்கள் கணினி மூலம் பதிவு செய்த கோரிக்கை மனுக்களுக்கான ஒப்புகை சீட்டுக்களை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு. நாகராசன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், திருப்பூர் தெற்கு மாநகர துணைச் செயலாளர் பி.ஆர்.செந்தில்குமார், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் பெரியார் காலனி எம்.எஸ். மணி, அவிநாசி பேரு கழக செயலாளர் திராவிடன் வ.வசந்தகுமார், மாவட்ட நெசவாளர் அணி முன்னாள் அமைப்பாளர் சு.செல்வரங்கம், மாநகராட்சி துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், மண்டலத் தலைவர் வெ.உமாமகேஸ்வரி, அவிநாசி பேரூராயட்சித்தலைவர் தனலட்சுமி பொன்னுச்சாமி, அவிநாசி பேரூராட்சி செயல் அலுவலர் இந்துமதி, அவிநாசி வட்டாட்சியர் மோகன் உள்பட மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல் மருத்துவரிடம் லஞ்சம் வாங்கி கையும் களவுமாகப் பிடிபட்ட


# அமலாக்கத்துறை அதிகாரி அங்கித் திவாரியின் ஜாமீன் மனு தள்ளுபடி!

### உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு!

திண்டுக்கல், டிச. 22-

திண்டுக்கல் மருத்துவரிடம் லஞ்சம் பெற்றபோது லஞ்ச ஒழிப்புத்துறையால் கைது செய்யப்பட்ட, அமலாக்கத்துறையின் மதுரை மண்டல இணை இயக்குநர் அங்கித் திவாரி மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், ஜாமீன் கோரி உயர்நீதிமன்ற மதுரை கிளையில் அங்கித் திவாரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு விசாரணையின் போது, தமிழ்நாடு அரசின் தலைமை குற்றவியல் வழக்கறிஞர் ஹசன் முகமது ஜின்னா ஆஜராகி அங்கித் திவாரிக்கு ஜாமீன் வழங்கக் கூடாது என கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

அங்கித் திவாரியின் மடிக்கணினியில் லஞ்சம் பெற்ற அமலாக்கத்துறையைச் சேர்ந்த 70க்கும் மேற்பட்டோரின் பெயர்கள் இருப்பதாகவும், அதனால், ஜாமீன் வழங்கக்கூடாது என்றும் லஞ்ச ஒழிப்புத்துறை சார்பில் நீதி மன்றத்தில் வாதிடப்பட்டது. இதனைப் பதிவு செய்த நீதிபதி சிவஞானம், அங்கித் திவாரியின் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார்.



தருமபுரி மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் மூத்த வழக்கறிஞர் சந்திரசேகர் தலைமையில் பூர்த்தி செய்யப்பட்ட வழக்கறிஞர் அணி படிவங்கள் தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பனிடம் வழங்கப்பட்டது.உடன் மாவட்ட துணை செயலாளர் வழக்கறிஞர்.ஆ.மணி,ஒன்றிய செயலாளர் எம்வீடி.கோபால்,துணை அமைப்பாளர் முரளிதரன், அரசு வழக்கறிஞர் நஞ்சுண்டன்,மணிவண்ணன், வடிவேல் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கரூர் வை. இரத்தினவேலு
### டிசம்பர் 22 (2011)



அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் கல்லூரியில் படிக்கின்ற காலத்திலேயே நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

கல்லூரிப் படிப்பு முடித்து வெளியே வந்தவுடன் புகளூர் கிளைக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்றவர். பின்னர் கரூர் ஒன்றியப் பொறுப்பாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், இரயில் மறியல் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் பெருந்தலைவராகப் பொறுப்பு வகித்தவர்.

2002ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், இவருக்கு தலைவர் கலைஞர் அவர்கள் "பெரியார் விருது" வழங்கிச் சிறப்பித்தார்.

இவரது இறுதிக்காலம் வரை டி.என்.பி.எல். காகிதஆலை ஒப்பந்த தொ.மு.ச.வின் தலைவராக இருந்து தொழிலாளர் நலனுக்காகவும் போராடியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**